| அனுப்புநர்: | பெறுநர்: |
|---|---|
| திரு. மு. பாலகிருஷ்ணன்,<br>துணை ஆட்சியர்/மாவட்ட மேலாளர்,<br>டாஸ்மாக் லிட்.,<br>நாகப்பட்டினம் மாவட்டம்,<br>இருப்பு :திருபுவனம். | தேசிய தகவலியல் மையம் (N.I.C)<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>நாகப்பட்டினம். |

**ந.க.எண்:300/2017/ஈ நாள்: 01.11.2017**

அய்யா,

பொருள்:தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம், நாகப்பட்டினம் மாவட்டம் - மதுபான சில்லறை விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்களுக்கான **ஒப்பந்தப்புள்ளிக்கோரி** 2017-2018 ஆம் ஆண்டிற்கு விளம்பரம் இணையதளத்தில் வெளியிடுவது - தொடர்பாக.

பார்வை:தொடர்புடைய ஆவணங்கள்.

---

நாகப்பட்டினம் மாவட்டம், டாஸ்மாக் லிட்., சில்லறை விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொருளில் கண்டுள்ளவாறு விளம்பரம் 02.11.2017 ந் தேதியில் தினசரி நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட உள்ளது. மேலும் இந்த விளம்பரத்தினை இணையதளத்திலும் வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

மாவட்ட மேலாளர், 1/11/17
டாஸ்மாக் லிட்.,
நாகப்பட்டினம்.

1/11/17

இணைப்பு: மேற்கண்டவாறு.

தகவலுக்காக நகல் பணிந்தனுப்பப்படுகிறது :-

1. முதுநிலை மண்டல மேலாளர், டாஸ்மாக் லிட்., திருச்சி.
2. மேலாண்மை இயக்குநர், டாஸ்மாக் லிட்., சென்னை.

தமிழ்நாடு மாநில வாணிப கழகம் லிட்.,

மாவட்ட மேலாளர் அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம்.இருப்பு:திருபுவனம்

ந.க.எண் 300/2017/ D

நாள்: 01.11.2017

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**மதுக்கூடங்களில் நுகர்வோர் அன்றாடம் விட்டுச் செல்லும் காலி பாட்டில்களை சேகரித்துக் கொள்ளல் மற்றும் தின்பண்ட விற்பனை அனுமதிக்கான ஒப்பந்தப்புள்ளி விபரங்கள் (01 டிசம்பர் 2017 முதல் 30 நவம்பர் 2018 முடிய உள்ள காலத்திற்கு)**

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் முகவரி | மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், நாகப்பட்டினம் மாவட்டம். (இருப்பு:திருபுவனம்) |
| 2. | ஒப்பந்தம் செய்யப்படும் பணிகள் சம்பந்தமான விபரம் | நாகப்பட்டினம் மாவட்டத்தில் இயங்கி வரும் டாஸ்மாக் மதுபான சில்லறை விற்பனை கடையுடன் இணைந்த மதுக்கூடத்தில் அன்றாடம் நுகர்வோர் விட்டுச் செல்லும் காலி பாட்டில்களை அவ்வப்பொழுது எடுத்துக்கொள்ளல், மதுக்கூடத்திலிருந்து அப்புறப்படுத்துதல் மற்றும் மதுக்கூடத்தில் தின்பண்ட விற்பனை அனுமதி |
| 3. | விண்ணப்பம் கிடைக்குமிடம் | மாவட்ட மேலாளர் அலுவலகம் டாஸ்மாக்<br>80, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,<br>திருபுவனம் - 612 103. |
| 4. | இணையதளம் | இந்த ஒப்பந்தப்புள்ளி பற்றிய விவரங்களை http://www.tenders.tn.gov.in, http://www.tasmac.tn.gov.in, என்ற இணையதளத்தில் காணலாம். மற்றும் விண்ணப்ப படிவத்தை பதிவிறக்கி நிரப்பி அனுப்பலாம். |
| 5. | விண்ணப்ப படிவம் விலை, செலுத்தும் விபரம் | விண்ணப்பத்தின் விலை ரூ.525/– (ஐநூற்றி இருபத்து ஐந்து மட்டும்) கேட்பு வரைவோலையாக மாவட்ட மேலாளர், டாஸ்மாக், நாகப்பட்டினம் என்ற பெயரில் கும்பகோணத்தில் மாற்றத்தக்க வகையில் செலுத்த வேண்டும். |
| 6. | விண்ணப்பம் எந்தத் தேதி முதல் எந்தத் தேதி வரை பெறலாம் | விண்ணப்பம்<br>03.11.2017 – முதல் 23.11.2017 வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் (அலுவலக நாட்களில் மட்டும். சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களை தவிர்த்து) |
| 7. | செலுத்தப்பட வேண்டிய பிணை வைப்புத் தொகை (E.M.D) (By DD only) | நகராட்சிப் பகுதி – ரூ. 20,000/–(ரூபாய் இருபதாயிரம் மட்டும்) இதர பகுதிகள் – ரூ. 5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மேற்கண்ட தொகைகள் கேட்பு வரைவோலையாக மாவட்ட மேலாளர், டாஸ்மாக், நாகப்பட்டினம் என்ற பெயரில் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| 8. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விண்ணப்பதாரர் நேரில் நாகப்பட்டினம் மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்ப்பதற்கான கடைசி நாளும், நேரமும் மற்றும் இடமும்.<br>இணையதளம் மூலம் மற்றும் தபால் மூலம் அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. | **24.11.2017** மாலை 3 மணி வரை<br><br>மாவட்ட மேலாளர் அலுவலகம் டாஸ்மாக் 80, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், திருபுவனம் - 612 103. |
| 9. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் இடமும், நாளும் மற்றும் நேரமும் | இடம்: மாவட்ட மேலாளர் அலுவலகம் டாஸ்மாக் 80, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், திருபுவனம் - 612 103.<br>**24.11.207 மாலை 3.30 மணி** |
| 10. | ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கும் முறை | ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொள்ளும் நபர்களில் எவர் அதிகத் தொகையை குறிப்பிடுக்கிறாரோ அவரே அந்த குறிப்பிட்ட மதுக்கூடத்தின் ஒப்பந்ததாராக தேர்ந்தெடுக்கப்படுவார். |
| 11. | நிபந்தனைகள்<br>1. மேற்குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் ஒப்பந்தபுள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது<br>2. பிணைவைப்புத் தொகைக்கான வங்கி வரைவோலையின்றி பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாமல் தள்ளுபடி செய்யப்படும்.<br>3. சரியாக பூர்த்தி செய்யப்பப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும்.<br>4. ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டமைக்கு சான்றாக ஒப்பந்த நிபந்தனைகளின் கடைசியில் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு கையொப்பமிடப்படாத ஒப்பந்தபுள்ளி தள்ளுபடி செய்யப்படும்.<br>5. ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொள்ளும் நபர் முன்னதாக தின்பண்ட விற்பனை மற்றும் காலிப்பாட்டில் சேகரம் செய்துக் கொள்ள உரிமம் பெற்று அதில் ஏதேனும் தொகை செலுத்தாமல் இருந்தாலோ அல்லது தவறான செயல்களில் ஈடுப்பட்டிருந்தாலோ அந்த நபரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.<br>6. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஒப்பந்ததாரர்கள் இருப்பிட சான்று அல்லது குடும்ப அட்டை நகல் அல்லது பான் கார்டு (PAN CARD) நகல் அல்லது ஆதார் அட்டை ஏதேனும் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும்.<br>7. தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் சரக்கு மற்றும் சேவை வரி செலுத்துவதற்கு தேவைப்படும் சரக்கு மற்றும் சேவை வரி பதிவு எண்(Service Tax Registration Number) மத்திய கலால் வரி அலுவலகத்திலிருந்து பெற்று டாஸ்மாக் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.<br>8. பிரதி மாதம் 5-ம் தேதிக்குள் சரக்கு மற்றும் சேவை வரியை செலுத்தி செலுத்துச் சீட்டின் நகலினை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>9. ஒப்பந்தப்புள்ளி தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய கட்டுப்பாடு அலுவலரிடமிருந்து உரிமம் பெற்று அதன் நகலை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.<br>(I) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த விண்ணப்பதாரர்களில் ஆஜரில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் முன்னிலையில் மாவட்ட மேலாளர் அவர்களால், நாகப்பட்டினம் டாஸ்மாக் அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்கள் 24.11.2017அன்று மாலை 3.30 மணி முதல் வட்ட வாரியாக மதுபான கடைகளின் ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும். | |

(II) அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் (அல்லது) எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் எந்தவித காரணங்களையும், கூறாமலேயே நிராகரிக்க மாவட்ட மேலாளருக்கு முழு அதிகாரமுள்ளது.

(III) தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் காப்புத் தொகையாக இருமாத மாதாந்திர கேட்பு தொகையை மாவட்ட மேலாளர் குறிப்பிடும் தேதிக்குள் செலுத்த வேண்டும். ஒவ்வொரு மதுக்கடைக்கும் தனித்தனியாக காப்புத் தொகை மதுக் கடையுடன் இணைந்த மதுக்கூடத்திற்கும் தனித்தனி வரைவோலையாக செலுத்த வேண்டும். இல்லையெனில் செலுத்திய பிணை வைப்புத்தொகை பறிமுதல் செய்யப்படும். மேலும் தேர்வு பெற்ற பின்னர் ஒவ்வொரு மாதத்திற்கான மாதாந்திர கேட்புத் தொகையினை நடப்பு மாதம் 5ம் தேதிக்கு முன்பாக மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் ஒவ்வொரு மதுக்கூடத்திற்கும் தனித்தனியே வங்கி வரைவோலையாக மாவட்ட மேலாளர் பெயரில் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.

(IV) தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்புத்தொகை அவர் செலுத்த வேண்டிய காப்புத் தொகை கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளியில் தேர்ந்தெடுக்கப்படாத நபர்களின் பிணை வைப்புத்தொகை, ஒப்பந்தபுள்ளி வேலைகள் முடிந்தபின் திருப்பிதரப்படும்.

மாவட்ட மேலாளர் 1/11/17
டாஸ்மாக் லிட்.,
நாகப்பட்டினம் மாவட்டம்.
இருப்பு:திருபுவனம்.

1/11/17